# ≡ உன் நினைவுகள் என் நினைவுகள் அல்ல!

ஒரு அடர்ந்த காட்டுப்பகுதியில் **ஆலிவ், ஓக், பைன்** என்ற மூன்று மரங்கள் செழிப்பாக வளர்ந்து வந்தன. இந்த மூன்று மரங்களும் ஒவ்வோரு பெரிய நோக்கத்தோடு வளர்ந்து வந்தன. இந்த ஆலிவ் மரமானது தான் தங்கம் வெள்ளி பொன் ஆகியவற்றை வைத்து பராமரிக்கக் கூடியதான பொக்கிஷப்பெட்டியாக மாறி பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு காணப்பட்டது. ஒருநாள் மரம் வெட்டும் மனிதன் வளர்ச்சியுற்ற எல்லா மரங்களையும் பார்த்தான். அவன் பார்வை அந்த அழகான ஓலிவ் மரத்தை எட்டியது. தனக்காக அந்த மரத்தை வெட்டிச் சென்றான். அந்த மரத்தை தன் விருப்பப்படி ஆடு மாடுகளுக்காக தீவனம் போடக் கூடிய ஒரு மரப் பெட்டியாக(Manger) செய்து முடித்தான். அதைப் பார்த்த அந்த ஆலிவ் மரத்தின் உள்ளம் உடைந்து போனது. தங்கம் வெள்ளி பொன் ஆகியவற்றை சுமக்க வேண்டிய நான் ஆடு மாடுகளுக்கு வேண்டிய புல், வைக்கோலை சுமக்கக்கூடிய மரப்பெட்டியாக இருக்கிறேன் என்று வேதனையோடு காணப்பட்டது.

ஆலிவ் மரத்தின் நண்பனான ஓக் மரமானது தனக்கென்று ஒரு பெரிய திட்டம் வைத்திருந்தது. அது என்னவெனில் உலகத்தில் உள்ள மிகப்பெரிய அரசர்கள் பயணம் செய்யக்கூடியதான எல்லா வசதிகளும் படைத்ததான சித்திர வேலையால் அலங்கரிக்கப்ட்ட பெரிய கப்பலாக மாறி பயன்படவேண்டும் என்று திட்டம் வைத்திருந்தது. நன்றாக முதிர்ந்திருந்த அந்த மரத்தை தேடி வந்த ஒரு சிறந்த தச்சன் அந்த ஓக் மரத்தை வெட்டிச் சென்றான். அதை தன் விருப்பப்படி மீன் பிடிக்கக் கூடியதான ஒரு சிறு படகாக செய்து முடித்தான். மிகப்பெரிய அரசர்கள் பயணம் செய்யக்கூடியதான கப்பலாக மாற வேண்டிய நான், மீன் பிடிக்கக் கூடியதான சிறு படகாக மாறி விட்டேன் என்று பெருமூச்சு விட்டு சோர்ந்து காணப்பட்டது.

மூன்றாவது மரமான பைன் மரமானது தான் எப்போதும் மிக உயரமான மலையில் நின்று கொண்டு தன்னைப் படைத்ததான தேவாதி தேவனை எப்போதும் மகிமைப்படுத்திக்கொண்டேயிருக்க வேண்டும் என்ற உள்ளத்தின் வாஞ்சையோடு இடைவிடாமல் தன் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டேயிருந்தது. எதிர்பாராத விதமாக ஒரு பெரிய இடி முழக்கம் அந்த பைன் மரத்தின் மேல் விழவே அது அப்படியே வேரோடு சாய்ந்து விழுந்தது. தான் வைத்திருந்த தான உன்னதமான திட்டம் உருக்குலைந்து எந்த நம்பிக்கையும் இல்லாத நிலையில் காணப்பட்டது.

இந்த மூன்று மரங்களும் தங்கெளுக்கென்று வைத்திருந்த தான திட்டங்களும், எதிர்பார்ப்புகளுக்கு எந்த விதமான மதிப்பும் இல்லாமல் போயிற்றென்று வருந்தின. நாட்கள் கடந்தன...

மரியாளும் யோசேப்பும் முதற்பேரான குமாரனாகிய **இயேசுவை** பெற்றெடுக்க சத்திரத்திலே இடம் இல்லாத படியினாலே ஒரு மாட்டுத் தொழுவத்திலே இயேசு பிறந்தார். அந்த இயேசுவை துணியில் சுற்றி மரியாள் அந்த ஆலிவ் மரத்தால் செய்யப்பட்ட அந்தப் பெட்டியின் முன்னணையிலே கிடத்தினாள். பொன் வெள்ளி போன்றவற்றை சுமக்கிற பொக்கிஷபெட்டியாக நான் மாற வில்லையே என்ற வேதனையோடு காணப்பட்ட அந்த ஆலிவ் மரம் இப்போது, இந்த உலகத்தில் காணப்படுகிற அழிந்து போகிற எந்த பொக்கிஷத்தைக் காட்டிலும் ஈடு இணையில்லாத விலை மதிக்க முடியாத விலையேறப்பெற்றதான இயேசுக் கிறிஸ்துவை சுமக்கிற முன்னணையாக (Manger) மாறியது.

இயேசு வளர்ந்தார் அவர் ஊழியம் செய்த நாட்களிலே திரளான ஜனங்கள் அவரை நெருங்கியதால் அவர் ஒரு சிறு படகில் ஏறி ஜனங்களுக்கு போதிக்கத் தொடங்கினார். இயேசு ஏறிய படகானது ராஜாக்களை சுமக்க வேண்டும் என்று ஆசையோடு காணப்பட்ட அந்த சிறு படகாயிருந்தது. உலக ராஜாக்களை சுமக்க காத்திருந்த அந்த ஓக் மரம் உலக ராஜாக்களோடு எவ்வளவேனும் ஒப்பிட முடியாத வானத்தையும் பூமியையும் அண்ட சராசரங்களையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் வார்த்தையாலே உண்டாக்கிய இராஜாதி இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவை சுமக்கிற படகாக மாறியது.

இயேசுவானவர் பிதா தனக்கு வைத்திருந்த ஊழியத்தை வெற்றியாய் நிறைவேற்றியப்பின்னர், இயேசு இந்த உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்ப்பதற்காக சிலுவைப் பாடுகளை சந்திக்கப் போகிறதான வேளையிலே ரோம போர்வீரர்கள் இடிமுழக்கத்தால் தாக்கப்பட்டு எந்த நம்பிக்கையும் இல்லாமல் தரையில் கிடந்ததான அந்த பைன் மரத்தின் இரண்டு துண்டுகளை சுமந்து வந்து அதை சிலுவையாக அடித்து அதில் இயேசுவை அறைந்தார்கள். ஒன்றுக்கும் பயனில்லாமல் பட்டுப்போன நிலையில் காணப்பட்ட அந்த பைன் மரமானது இன்று உலக ஜனங்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தக்கூடியதான ஒரு புனித சின்னமாக மாறியது.

இது ஒரு கற்பனைக் கதையாக இருந்தாலும் இதன் மூலமாக ஒரு பெரிய காரியத்தை அறிந்து கொள்ளலாம். சிறு பிள்ளையாகிய நீயும் கூட கடந்த இந்த வருடத்திலே நியாயமான ஆசைகளை எதிர்பார்த்து, ஒரு வேளை அவைகள் நிறைவேறாமல் இருந்திருக்கலாம், அல்லது என் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? என் பெற்றோருக்கு ஆசீர்வாதமாக இருப்பேனா? என்று நீ நினைத்துக் கொண்டிருக்கலாம். இந்தக் கதையில் நீ பார்த்த மூன்று மரங்களும் தாங்கள் வைத்திருந்த திட்டங்கள் நிறை வேறாமல் போனாலும், அவைகள் நினைத்ததற்கும் மேலாக எந்த மரத்திற்கும் கிடைக்காத பெரிய சிலாக்கியத்தைப் பெற்றன. அதுபோல கர்த்தர் உனக்கென்று ஒரு பெரிய திட்டத்தை வைத்திருக்கிறார். நீ அவருடைய பார்வையில் விலையேறப்பெற்ற பிள்ளை. அவருடைய திட்டங்கள் இன்றைக்கு உனக்கு புரியாவிட்டாலும், உன்னைக்கொண்டு நிறைவேற்ற வேண்டிய காரியங்களை ஏற்ற வேளையில் நிறை வேற்றியே தீர்வார். அவர் உன்னை கைவிட மாட்டார் சிறிதளவும் சோர்ந்து போகாதே

வேதம் கூறுகிறது என் நினைவுகள் உன் நினைவுகள் அல்ல உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல வென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதொ அப்படியே உங்கள் வழிகளை பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. ஏசாயா 55:8,9 என் அருமை பிள்ளைகளே உனக்கு கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களில் நீ உண்மையாயிரு “ You do your best. God will do the rest” கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.